மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கிறது. அதுபோன்று சிறுபான்மை மொழியும் பயிற்று மொழியாக இருக்கின்றது. ஆகவே தமிழ் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில் மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில், தமிழைப் பாட மொழியாக எடுத்துப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழக அரசின் கல்வி மானியத்தைப் பெறுவதற்கு தனியார் பள்ளிகளில் எவ்வளவு சதவீதம் தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஏதாவது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பயிற்று மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்பது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முடிவு. புதியதாக யாருக்கும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக நடத்துவதற்கு நாம் அனுமதி தருவதில்லை. அப்படி விரும்புகின்றவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைக்க வேண்டுமென்றால், அவர்கள் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளாக, அரசினுடைய உதவி இல்லாத பள்ளிகளாக நடத்திக் கொண்டிருக்க வேண்டும்.

முதியோர் கல்வித் திட்டம்.

727—(*வினா எண் 2048)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதியோர் கல்வித் திட்டத்தில் பயன் அடைவோர் எத்தனை பேர்?

(ஆ) தமிழகத்தில் எத்தனை முதியோர்க் கல்வி மையங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 6,93,168 பேர்கள்.

(ஆ) 22,122 மையங்கள்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வியை கிராமப்புறங்களில் கற்றுத் தருகின்ற முறை சென்னை போன்ற நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கப்படுமா என்பதையும், இதிலே எவ்வளவு ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் என்று வருகின்றபோது மையத்திற்கு ஒருவர் இருப்பார். ஆக 22,122 மையங்களில் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். நகரங்களிலேயும் இதைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் தமிழக அரசிற்கு இருக்கிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், அல்லது தொண்டு நிறுவனங்கள் போன்றவை நகர்ப்புறப் பகுதிகளில் இந்த சேவையைச் செய்யலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் எந்தத் துறையின் மூலமாக அல்லது எந்த அதிகாரியின் மூலமாக இந்த மையங்களை ஒன்று சேர்த்து அமைக்கின்ற முயற்சிகள் நடைபெறுகின்றன, யாரைத் தொடர்பு கொண்டால், இந்த மையங்கள் அமைக்கப்படும் என்கின்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் என்ற அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

728—(*வினா எண் 9129)—திரு. எப். எம். இராசரத்தினம் மற்றும் திரு. ெ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாக பணி புரிகின்றவர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த ஒரு சமூகத் தொண்டு புரிகிற அவர்களை எதிர்காலத்திலாவது நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களாக தமிழகத்தில் எத்தனை பேர் பணி புரிகிறார்கள், எவ்வளவு வயது வந்தோர் சென்ற ஆண்டில் பயன் பெற்றார்கள், இவ்வாண்டு எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்பதையும் எந்த அடிப்படையில் மேற்பார்வையாளர்களாகப் பணிக்கு